*ter XXIII code of Criminal Procedure)*
*IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

*S.C. NO : 31/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 1 |
| Name | : | திருமதி. பூங்கோதை |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 23.11.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.11.2020.*

**<u>முதல்விசாரணை</u>:-**

நான் தற்போது செவலூரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ராதா என்னுடைய மகள். சம்பவ சமயத்தில் எனது மகள் 8-வது படித்துக்கொண்டிருந்தார். அவருக்கு 15 வயது. பிறந்ததேதி நான் படிக்காததால் எனக்குத் தெரியாது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என்னுடைய மகள் பள்ளிக்கு படிக்கச் சென்றாள். பள்ளிக்கு சென்றவர் திரும்பி வீட்டிற்கு வரவில்லை. என்னுடைய சின்ன மகள் மாலதி என்னுடைய மகள் ராதாவை சித்தப்பா பைக்கில் எற்றிச்சென்றதாக கூறினாள். ஆஜர் எதிரி எனது மகளுக்கு சித்தப்பா முறை. நான் என் மகளை காணவில்லை என்று ஒருமாத காலமாக தேடினேன். என்னுடைய இளைய மகள் ஆஜர் எதிரி அழைத்துச்சென்றதாக சொல்லியதால் பள்ளி தலைமைஆசிரியரிடம் சென்று நான் புகார்கொடுத்தேன். அவர் காவல்துறையினரிடம்

செல்லும்படி சொன்னார். நான் பனையப்பட்டி காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அது அ.சா.ஆ.1. நான் தேடிப்பார்த்தபோது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஆஜர் எதிரியுடன் என் மகளை அங்கும் இங்கும் பார்த்ததாக சொன்னார்கள். நான் என் மகளுக்கு ஆஜர் எதிரி சித்தப்பா முறை வேண்டும் என்பதால் வருத்தப்பட்டேன். நான் காவல்துறையினரிடம் என் மகளை உறவிர்கள் கூப்பிட்டு கேட்கும்போது, ஆஜர் எதிரியின் அண்ணன் மும்பையில் இருப்பதாக போலீசாரிடம் சொன்னேன். பனையப்பட்டி போலீசார் மும்பைக்கு சென்று ஆஜர் எதிரியையும் என் மகளையும் மீட்டுவந்தார்கள். பனையப்பட்டி போலீசாருடன் என் கணவரும் சென்றார். 2, 3 வருடங்கள் கழித்துதான் என் மகளை போலீசார் கண்டுபிடித்து அழைத்து வந்தார்கள். என் மகள் 5 வருடங்கள் கழித்து ஒரு குழந்தையுடன் வந்தார். என் மகளை நான் விசாரித்ததற்கு என் மகளை ஆஜர் எதிரி அழைத்துச்சென்று லாஜில் வைத்திருந்ததாகவும், பின்னர் மும்பைக்கு அழைத்துச்சென்றதாகவும் சொன்னார். என் மகள் காணாமல்போனபோது என்னுடைய தங்கையின் நகைகளான 5 பவுன் செயின், 3-1/2 பவுன் நெக்லஸ், 1/2 பவுன் தோடு, மோதிரம் 1/2 பவுன், டாலர் பாசிமணிபோல் உள்ளது ஒன்று ஆகியவற்றை எடுத்துச்சென்றுவிட்டார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>:-

எனது மகள் ராதாவிற்கு தற்போது திருமணம் ஆகிவிட்டது. இருந்தாலும் அவருடைய பிள்ளை என்னிடம் உள்ளது. எங்கள் ஊருக்கும், பனையப்பட்ட காவல்நிலையத்திற்கும் சுமார் 5 கி.மீ தூாரம் என்றால் சரிதான். எனது கணவர் என்னுடன்தான் இருக்கிறார். நான் காவல்நிலையத்தில் எனது மகள் காணாமல்போனது குறித்து எழுத்துமூலமாக புகார்கொடுத்தேன். என் மகள் மாலதி எழுதிக்கொடுத்தார். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நான் ரேகைதான் வைத்தேன். என்னுடைய மகள் அது யாருடைய ரேகை என்று குறிப்பு வரைந்தார். என் மகள் புகாரில் அவர்தான் புகாரை எழுதினார் என்று எழுதி கையெழுத்து போட்டாரா என்றால், ஆமாம். எனது மகள் காணாமல்போனது குறித்து ஒருமாதம்

கழித்துதான் புகார்கொடுத்தேன் என்றால், ஆமாம். அதுவரை போலீசில் புகார்கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரில் எனது மகளை எங்கெங்கு தேடிப்பார்த்தோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். நான் புகார்கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். புகாரை கொடுத்து இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அதன்பின்னர் மாதம் ஒருமுறையும், வாரம் ஒருமுறையும் போலீசார் வந்து விசாரித்தார்கள். அந்த சமயத்தில் அந்த வாக்குமூலங்களை எழுதிக்கொண்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. என்னை போலீசார் விசாரித்தபோது எனது இளையமகள் மாலதி ஆஜர் எதிரி வாகனத்தில் ராதாவை ஏற்றிச்சென்றதாகவும், அதை அவர் பார்த்ததாகவும் அன்றையதினமே அதை என்னிடம் என் இளையமகள் மாலதி சொன்னதாகவும், நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் என் மகள் படித்த பள்ளியில் தலைமை ஆசிரியரிடம் விசாரித்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியுடன் என் மகளை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பார்த்தாக சொன்ன விவரத்தையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகளை நான் விசாரித்தபோது ஆஜர் எதிரி அவரை லாட்ஜில் வைத்திருந்ததாக சொன்ன விவரத்தையும் நான் போலீசார் என்னை மீண்டும் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் உடன் பிறந்த சகோதரியின் பெயர் சரசு. நகைகள் காணாமல்போனதாக நான் சொல்லியுள்ளேன். அந்த நகைகள் என் தங்கையின் நகைகள், அவருக்கு அந்த விவரம் தெரியும். நகை சம்மந்தமாக போலீசார் என் தங்கையை விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் நகைகள் காணாமல்போனது, எனது தங்கையின் நகைகள் என்பது பொய் என்றாலும், அவ்வாறு நகைகள் காணாமல்போயிருந்தால் என் தங்கையை விசாரித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தங்கையின் நகைகள் எனக்கு வேண்டும். என்மீது பனையப்பட்டி காவல்நிலையத்தில் ஒரு குழந்தை இறந்தது சம்மந்தமாக வழக்கு போட்டார்களா என்றால், ஆமாம். அது சம்மந்தமாக என்னை போலீசார் கைது செய்திருந்தார்கள். நான் சொல்வதுபோல் என் மகள் காணாமல்போனதற்கும், எதிரிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே என் மகள் எனக்கு தெரிந்து

காணாமல் போயிருந்தால் உடனடியாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகள் என்னுடன் கோபித்துக்கொண்டு அவரது தோழிகளுடன் இருந்தார் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*